# காலநதி

கவிதைத் தொகுப்பு



- வட்டக்கச்சி வினோத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலநதி

வட்டக்கச்சி வினோத்

வெளியீடு
தொலைநோக்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | காலநதி |
| நூலின் வகை | : | புதுக்கவிதை |
| நூலாசிரியர் | : | வட்டக்கச்சி வினோத் |
| வெளியீடு | : | தொலைநோக்கி |
| பக்கங்கள் | : | 80 |
| பிரதிகள் | : | 1000 |
| பதிப்புரிமை | : | ஆசிரியருக்கு |
| அட்டைப்படம் | : | எஸ்.விஜய் |
| முதற்பதிப்பு | : | செப்டெம்பர், 2017 |
| தொடர்புகளுக்கு | : | தொலைபேசி 0777967067<br>முகநூல் Vaddakkachchi Vinoth<br>ஈமெயில் skvinoth86@gmail.com |
| அச்சகம் | : | விஜய் அச்சுப் பதிப்பகம்,<br>024 2225799 / 077 9009491 |
| ISBN | : | 978-955-43466-0-4 |
| விலை | : | ரூ.220/- |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

வாழ வைக்கும் தமிழுக்கு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

பதினைந்தாம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் இருண்ட யுகத்திற்குப் பின்னான மறுமலர்ச்சிக் காலமானது, அவர்களின் பல்வேறு முன்னேற்றங்களுக்கு வித்திட்டது மட்டுமல்லாமல் நாடுகாண் பயணங்களின் மூலம் உலகம் முற்றும் பரப்பப்படுவதற்கும் காரணமானது. தொடர்ந்து வந்த கைத்தொழிற் புரட்சி பல அரிய கண்டுபிடிப்புக்களைத் தந்து விண்ணைத் தொடுமளவிற்கு மனித சமுதாயத்தை இட்டுச் சென்றது. இயற்கையைப் பார்த்து பறக்கவும் தாவவும் பலதரப்பட்ட கனவுகளையும் கண்டுகொண்டிருந்த மனிதனின் கனவுகளை நனவாக்கி இன்று தொழில்நுட்ப வளர்ச்சியில் உச்சத்தைத் தொடுமளவிற்கு உயர்வுகளை வழங்கியது.

அதனைப் போலவே, எமது நாட்டில் தற்பொழுது காணப்படும் அமைதியான சூழ்நிலையானது, பலவிதமான அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு வித்திடுவதைக் கண்கூடு பார்க்க முடிகின்றது. கைத்தொழில் அபிவிருத்தி, கிராமிய அபிவிருத்தித் திட்டங்கள், கல்வியில் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளும் பெறுபேறுகளும், தொழில்நுட்ப விருத்தி, பாதைகள் புனரமைப்பு, மின்சார வழங்கல் என்பவை அபிவிருத்திக்குரிய குறியீடுகளாக அவ்வப்போது காட்டப்படுகின்றன. சுமூகமான சுற்றாடல் இலக்கியப் படைப்புக்கள் எழுவதிலும் அதே போன்ற ஒரு பங்களிப்பைக் காட்டுவதை யாரும் மறுத்துவிட முடியாது. அதுவும் எமது தலைமுறையினர் அடுத்தடுத்து சந்தித்த பொருளாதார, அரசியல், சமுதாய நெருக்கடிகள், இளம் சமுதாயத்தினரை வெகுண்டெழுச் செய்து தங்களது தாக்கங்களை, உணர்வுகளை வெளிப்படுத்த வேண்டும் என்ற நிலைக்குத் தள்ளுகின்றன. அவற்றினால் உந்தப்பட்ட எமது இளைய தலைமுறையினர் தங்களுடைய ஆதங்கங்களை வெளிப்படுத்துவதற்கு முக்கியமாகக் கவிதை வடிவத்தைப் பாவிக்க முனைகின்றனர். ஏனைய இலக்கியங்களை விட இசையோடு கூடிய பேச்சு அல்லது கவிவடிவங்கள் மக்களை இலகுவாகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றடைந்து விடுகின்றன. கவிதைக்கு இது தான் என்று ஒரு வரையறையை யாருமே செய்துவிடாது இருப்பதால் யாரும் அதைக் கையாண்டு உருவாக்க முடியும் என்ற எண்ணத்தையும் அவர்கள் கொண்டுள்ளனர். இதனால் இலக்கியத்திற்குள் நுழைவதற்கு ஒரு திறவு கோலாகவே கவிதை என்ற வடிவத்தைப் பாவிக்கின்றனர்.

அது மட்டுமல்ல. இலக்கியங்கள் காலத்தின் கண்ணாடி என்பதனால் எமது காலத்தில் நடந்துவிட்ட பதிவுகளைச் சரியாகக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்துடன், இலக்கியத்தை உயிரோட்டமாக்க வேண்டும் என்ற எண்ணத்துடனும் ஒரு சிலர் கையாள்வதாகத் தெரிகின்றது. அது மட்டுமல்ல சமகால நிகழ்வுகள், நிதர்சனங்கள், பொருளாதார நெருக்கடி, தொழில்நுட்ப வளர்ச்சியின் கோரத் தாண்டவங்கள், இயற்கையின் சீற்றம் போன்ற விடயங்களைப் பதிவளித்துத் தங்கள் இலக்கை அடையவும் முனைகின்றனர். அவர்கள் எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்வதைப் போல அது ஆதங்கப்படைப்பாகவே எழுந்தாலும், அதன் விளைவு உலகிற்கு அவலங்களை எடுத்துக் காட்டி தீர்வுகளைத் தேடிக் கொள்ளவும் துணைபுரியும். மனித வரலாற்றில் வெவ்வேறு காலங்களில் எழுந்த பல இலக்கியங்கள் மக்கள் வாழ்க்கையை மாற்றியமைத்ததை அவ்வளவு சீக்கிரத்தில் யாரும் மறந்துவிட முடியாது.

அரசியல் பொருளாதார மாற்றங்களுக்கும் அடிமை வாழ்வை உடைத்தெறிவதற்கும் இலக்கியங்கள் உறுதுணையாக இருந்தன. பெண் விடுதலை பற்றிய பாரதியின் பாடல்கள், அவரின் தேசவிடுதலை பாடல்கள் தமிழ் நாட்டில் பல எழுச்சிகளைக் கொண்டன. ஐரோப்பாவில் உயர் குடிப் பெண்கள் வாசிப்பதற்காக எழுந்த இலக்கியங்கள் பல பொருளாதார மாற்றங்களைக் கொண்டுவந்தன. இருப்பினும் பதிவுகள் அனைத்தும் இலக்கியங்கள் ஆகுமா என்று சிந்திப்போமாயின், நடப்புக்களை அவ்வாறே சொல்லிக் கொள்வதை செய்திகள் என்போம். நிகழ்ந்துவிட்ட பதிவைத் தரவுகளோடு வழங்குவதை சரித்திரம் என்போம். படைப்பிலக்கியம் இவற்றில் இருந்து வேறுபட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நயத்துடன் அமைய வேண்டும்.நயத்துடனே எழும் இலக்கியத்தை படைப்பதற்கு அனுபவம் அவசியமாகின்றது. அனுபவம் அறிவுறுத்தும் பாடத்தை அத்தனை தெளிவாக ஆசிரியராலேகூட சொல்லிக் கொடுத்துவிட முடியாது. இந்த அனுபவமானது ஒவ்வொருவரினதும் வயதைப் பொறுத்தும் தேடலைப் பொறுத்தும் கிடைக்கின்றது என்பது உலகமறிந்த உண்மையாகும். தேடல்களில் இருந்து எழும் பொதுநோக்கு தீர்வாகும்போது அது காத்திரமான இலக்கியமாக வடிவெடுக்கின்றது. விதைகளுக்கு சிறப்பான நயம் என்பது கற்பனையால் உருவாக்கப்படுகின்றது. அந்தக் கற்பனையினாலேயே ஒரு விஞ்ஞானிக்குரிய இடத்தைப் படைப்பாளி பெற்றுக்கொள்கின்றான். கவிவரிகள் உவமை, உருவகம், தற்குறிப்பேற்றம், உயர்வு போன்ற அணிகளால் அலங்கரிக்கப்படுகின்றது. பெண்ணுக்கு அணிகலன்கள் அழகு சேர்ப்பதைப் போல படைப்புக்கு அழகையும் கனதியையும் இவை சேர்த்து நிற்கின்றன. அவற்றில் இருந்தெல்லாம் வேறுபட்டு கற்பனை என்பதை முற்றாகவே தள்ளிவிட்டு, நடப்பைக் காட்சிப்படுத்துவது போல ஒரு விடயம் தற்பொழுது கையாளப்படுகின்றது. இது கவி வடிவத்தையும் கவித்துவத்தையும் தொலைத்துவிட்டதாகப் பெரியவர்களால் குறை சொல்லப்ப டுகின்றது. காலத்தின் கோலங்கள் இளையவர்களின் கருத்துக்களை வெகுவாக ஈர்த்துக் கொள்வதையும் நாம் இங்கு கவனித்தே ஆக வேண்டும்.

இன்றைய விஞ்ஞான விருத்தியின் முன்பாக மனிதனின் ஓட்டம் எப்படி இருக்கிறது? ஒரு உயரமான மலைச்சரிவில் ஓய்வில் இருந்த ஒரு பாறாங்கல் உருளத் தொடங்கும் ஒரு நிலையைக் கற்பனை செய்து கொள்வோம். அதைப் பார்த்துக் கொண்டு நின்ற குரங்கு ஒன்று பயந்து கொண்டு அதற்கு முன்னாலே ஓடிச் செல்வது போல அமைந்தது தான், விஞ்ஞானத்தில் முன்பாக ஓடிக் கொண்டிருக்கும் மனித சமுதாயத்தின் ஓட்டமாகும். அவர்கள் நின்று நிதானிக்க வேண்டும். வாழ்க்கையின் ஓட்டத்திற்கு ஏற்றது போலவும் இன்றைய நெருக்கடி நிலையை மேவும் விதமாகவுமே அவர்களின் இலக்கியங்கள் அமையலாம் என்பதை ஏற்றுக் கொள்வோம். அப்படியானால் அவற்றின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைத்திருக்கும் தன்மை என்பது எவ்வாறு இருக்கப் போகின்றது என்ற கேள்வியும் அடுத்ததாக எழுகின்றது. நிகழ்கால நிதர்சனங்களைக் கண்ணோக்கியபடி தன் சிறகுகளை நீட்டிவரும் வினோத் அவர்களின் "காலநதி" என்ற கவித்தொகுப் பிற்கு அணிந்துரை வழுங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன். இளையவராக இருந்தாலும், மரபுகளை மறக்காமல் வெறுக்காமல் அவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் பழமை மறவாமல் எழுயிருப்பது சந்தோசத்தை அளிக்கின்றது. இருப்பினும் அவை மரபுகளைப் பின்பற்றியிருக் கலாமே என்ற ஆதங்கமும் எழாமல் இல்லை. தொழில்நுட்ப விருத்தியினால் ஓடிக்கொண்டிருக்கும் எமது இளைய சமுதாயம், எவ்வாறு ஆறுதலாக நயத்துடனான படைப்புக்களை வழங்கப் போகின்றது என்பது அவருக்கு கேள்விக்குறியாக இருந்ததனால் அவ்வாறு வழங்கியிருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகின்றது. "எல்லாம் மாறிப்போனது போரோடு எதிர்த்து நிற்கின்றோம் கவலையோடு..". என்ற வரிகள் அவற்றைப் புலப்படுத்துகின்றன. தொடர்ந்துவரும் பெண்களின் மீதான வன்முறையை அவர் கடுமையாகச் சாடுவது புரிகின்றது. "பெண்மானம் தன்மானம் என்று வாழ்ந்த பூமியில் தமிழன் என்று சொல்லாதே தலை நிமிர்ந்து நில்லாதே" என்று புலம்புகின்றார். புலம்பெயர்ந்தும் இடம்பெயர்ந்தும் தொலைத்து விடும் சந்தோசங்களை" அரபுதேச சுடுமணலும் ஆற்றாமல் நீர் அழுத கண்ணீரோ" என்று வித்தியாசமாக உவமிக்கின்றார்.

இன்றைய தலைமுறையினர் பலவித நெருக்கடிகளையும் துன்பங்களையும் தாங்கிக் கொண்டு இருப்பதால், இலக்கியங்கள் குறிப்பிட்ட வடிவமின்றி அவசரத்திற்கு ஏற்றது போலவே உணர்வுகளை வெளிப்படுத்தலாம் என்ற எடுகோளுடன் பயணம் செய்தோம். அவற்றின் நிலைக்கும் தன்மை என்று பார்க்கும்போது, எமக்கு இருபது வருடங்க ளுக்குப் பின்னரான தலைமுறையினரைப் பற்றி நோக்குவோம். அவர்கள் யுத்த சூழலையோ பொருளாதார நெருக்கடியையோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறியாதவர்களாகவே இருப்பர். அவர்கள் பார்வையில் எமது இலக்கியங்கள் குறைந்துவிடக் கூடாது. இலக்கியங்கள் காலத்தைக் கடந்தவை. மனித உடல் மறைந்த பின்பும் இலக்கியங்கள் வாழும். பாரதியாரையும் கம்பரையும் கண்ண தாசனையும் இன்றும் நாம் போற்றவில்லையா? காலத்தால் அழியாத இலக்கியங்களைப் படைக்க வேண்டியது எமது கடப்பாடல்லவா? இலக்கியத்தினைப் பற்றிய அறிவையும் அறிமுகத்தையும் மட்டும் வழங்குவது அல்லாமல், இளையவர்களின் படைப்புக்களைத் தொடர்ந்து அவதானித்து இந்த விடயங்களை உறுதி செய்வது பெரியவர்களின் பங்களிப்பாகும். இளையவர்களின் ஆதங்கத்தைப் புரிந்து கொண்டு, அவர்களை அன்பாலே வழிப்படுத்தி அழைத்துச் செல்ல வேண்டியவர்கள் அவர்களே. பெரியவர்களின் பங்களிப்பு வரும்போதே மரபு என்ற விடயமும் இதற்குள்ளே புகுந்து விடுக்கின்றது. அவசர உலகம் விளங்கிக் கொள்ளுமாறு எளிமையாகப் படைப்புக்களை செய்வது போலவே, மரபு என்ற விடயத்தையும் புகுத்திக்கொள்ள வேண்டும்.

இதனால் எளிமை, மரபு என்ற இரு எல்லைகளுக்குள்ளே இலக்கியங்க ளைப் படைப்பது நலமானதாகும். வாழ்வினில் எப்பொழுதும் இரு எல்லைகளைக் கொண்டிருப்பது சிறப்பா னதே. ஓடும் ஆறு இரு கரைகளைக் கடக்காது இருப்பதைப் போல எமது இலக்கியத்தையும் எளிமை, மரபு என்ற எல்லைகளுக்குள் பேணுதலே கடமையாகும். அவ்வாறான இரு எல்லைகளுக்குள் கவித்துவத்தையும் கவி நயப்பையும் கட்டியாளுவோம். கவிதையின் வகைகளைக் கொண்டு கவிஞர்களை விமர்சிக்காமல், எண்ணங்களின் வெளிப்பா டுகளை வரவேற்போம். இளையவர்களுக்கான களம் பெரியோ ரால் ஏற்படுத்தப்படட்டும். எம்மவரின் இலக்கியங்க ளினூடே வட்டக்கச்சி வினோத்தின் காலநதியும் காலங்கடந்து வாழட்டும்.

**மைதிலி தயாபரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

இவரின் கவிதை தொகுக்கப்பட்டு நூலுருவாக வெளிவருவது மிகவும் மகிழ்ச்சிக்குரியதே, பிறந்து விட்டோம், வாழ்ந்து விட்டோம், இறந்து விடுடோம் என்றில்லாமல் பாரம்பெரியமிக்க ஈழத்துக்கவிதை வரலாற்றில் எமது கல்லூரி மாணவன் எம் சமூகத்தின் தடைத்தினை நிலைநிறுத்தும் நன்னோக்கோடு தன் சிந்தனையில் கருக்கொண்ட எண்ணங்களுக்கு உருக்கொடுத்த இவரின் கவிதைப் பிரசவம் தான் "காலநதி" என்னும் கவிதை தொகுப்பு நூல் இக் கவிதை தொகுப்பின் மூலம் யாப்பு இவரிடம் கைகட்டி சேவகம் புரிகின்றது. சந்தம் இவரை சொந்தம் கொண்டாடுகின்றது. அது மட்டுமா இத் தொகுப்பில் இடம்பெறும் சமூகம் பற்றிய இவர் சிந்தனைகள் உள்ளத்தை நெருடுவதாகவும் சமூக ஆவணப்ப டுத்தலாகவும் அமைகின்றது.

கவி படைத்து விட்டாய் எனவே கவிச்சொல்லால் வாழ்த்துதல் எம் மாத்திரம். மொட்டாகி, மலராகி, காயாகி, கனியாகி இளம் கவிஞனே வானவீதியில் உலாவரும் மேகக் கூட்டங்களிலிருந்து விழுந்த சிறிய மழைத்துளியாய் உன் சிந்தனை விரிந்து கருப்பொருளில் ஆழம் கண்டு கவித்துவத்தில் எளிமை செறிந்து, இன்னும் பல கவிப்பிரசவங்களை ஈன்று, புறந்தர முத்தான அருஞ் சொற்கள் கொண்டு முளைத்தெழுந்த இக் கவிதைத் தொகுதி கற்றோரும் மற்றோரும் கண்டு வியந்து கரைகாணாது சிந்தனை செயல் வடிவம் கொண்டு வரிவடிவம் வகுத்து வளர்ந்துவரும் கவிப்பணி நீண்டதூரம் சென்று நிலைத்து நின்று தென்றலாகி நின்ற உன் கவிகள் புயலாகி தேன் மதுரைத் தமிழோசை உலகெல்லாம் பரவும் வகையில் தமிழோடு உன் நாமமும் இணைந்து இன்புற்று நிலைத்திருக்க தங்கள் கவிப்பணி செழிக்க மனமார வாழ்த்துகின்றேன்.

**திரு.இமானுவல்**
இராமநாதபுரம் மகா வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வட்டக்கச்சி வினோத் ஒரு கவிக்குரல்

முளை கொள்ளும் இளவல்களுள்
தமிழ் வயல்தனிலே வளரும்
களை கண்டு
பொங்கியெழுந்து தமிழ் பொறியாகி
பொறுமையோடு போராடும்
தமிழ் கவி இளவல்தான் வட்டக்கச்சி வினோத்

குளிர்மைக்கும் அறிவுக்கும்
பெயர் போன தேசம்
கோர யுத்தத்தின் கொடுமையால்
வறுமையை தாங்கி நெறி பிறழ்ந்து போக
தமிழ் பண்பாடு கலாசாரம் சமூக பெறுமானம்
சாவின் விளிப்பில் ஊஞ்சல் ஆடிய பொழுதில்
எதிரிக்கும் முன்னே எழுந்து நடந்து
சட்டம் கொண்டே சாதனை புரிந்த
சமூக இளவல்தான் வட்டக்கச்சி வினோத்

அவை அடக்கமும் அவைக்கு அடக்கமும்
நிறைந்த அமைதியின் முதிர்ச்சியும்
பல மணிநேரம் பொறுமையோடு போராடும்
சகிப்பு தன்மையும் சாணக்கியமும்
நிறைந்த அமைதி இளவல்தான் வட்டக்கச்சி வினோத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழில் உருண்டு புரண்டு முட்டி மோதி
தமிழன் தனித்துவம் காக்க
மொழிக்குள்ளே புறப்பட்டு
கவி கடலில் கன்னி முத்தெடுத்து
தத்தி தத்தி வரும்
வட்டக்கச்சி வினோத்தின் அழகு
கவிதைக் குழந்தையை
தட்டிக்கொடுத்து வரவேற்று
வாழ்த்துகிறேன்.

வட்டக்கச்சி வினோத் நீ
கவிதையால் நீ வாழ வேண்டும்
தமிழ் கவிதை உன்னால் வளரவேண்டும்
தொடரட்டும் உன் கவி பணி
மிளிரட்டும் நீ படைத்த
கவி குழந்தைகள்.

அன்புடன்
**யாழரசு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

கவிஞன், கவிதை என்ற சொல்லுக்கு ஏற்புடையவன் என்பது பொருந்தாவிடினும் என் கற்பனையில் தோன்றியதை படைக்கும் ஆற்றலை இறைவன் எனக்கு கொடுத்துள்ளான், என்னை பக்கத்தே இருந்து வழிப்படுத்தும் நல்லவர்களையும் கொடுத்துள்ளான். என் படைப்புக்கள் உருவாக காரணம் நான் மனிதநேயத்தையும் மனிதனையும் மதிக்கும் பக்குவத்தை அறிய உதவியாக இருந்தது உளவளத்துணை என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். உள்ளத்தில் பாதிப்புக்கள் தமிழன் என்ற வகையில் நானும் ஏற்றவன். அதனால் என்னுடைய ஆக்கம் உங்களை கவரும் என்பதில் நம்பிக்கை உள்ளவனாக உள்ளேன்.

என்னை வளப்படுத்திய என் குடும்பம், என் நன்பர்கள், ஆசிரியர்கள், கவிஞர்கள் எல்லோரிடமும் நன்றிக்கடன் பட்டவனாக உள்ளேன் குறிப்பாக முகப்புத்தகத்தில் என்னை பாராட்டும் என் கவிதையை விரும்பும் நன்பர்களுக்கும் நன்றியுள்ளவன் ஆவேன். துன்பங்கள் வந்தபோது அதை ஆக்கமாக்கும் சக்தியை பலர் பெற்றுள்ளபோதும் அது வெளியிடப்படும் சந்தர்ப்பத்தை உருவாக்குவது இறைவன் என்றே கூறுவேன். பலரது படைப்புக்கள் இன்னும் அப்பியாச புத்தகத்திலே உள்ளது. எனதும் கூட, அதை வெளியிட உதவிய அனைத்து உள்ளங்களுக்கும் எனது நன்றியை தெரிவிப்பதோடு தொடர்ந்து வரும் விமர்சனங்களால் என்னை நான் செதுக்க முடியும் எனும் நம்பிக்கையையும் பதிவு செய்கிறேன்.

நன்றி

**வட்டக்கச்சி வினோத்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | |
|---|---|
| அடங்கிய கனவு | 01 |
| வேதனை யாருக்கு... | 01 |
| நினைவகலாது | 02 |
| ஆசான் | 04 |
| போதை மோகம் | 05 |
| விடுகதையோ | 09 |
| ஏக்கம் | 10 |
| என் செய்வோம் நாம் | 11 |
| எல்லாம் அன்பளிப்பே | 12 |
| எது விதி | 14 |
| விசமற்ற விவசாயம் | 14 |
| ஏது பதில்..? | 15 |
| மௌனம் | 15 |
| இரவல் இருப்பிடம் | 16 |
| தர்மம் | 17 |
| முடக்கப்பட்டவள் | 18 |
| கெடுத்துவிட்டுப் போனவன் | 19 |
| தியாகம் | 20 |
| ஓடாத வெளிநாடு | 21 |
| வாழ்க அகம் | 22 |
| நான் அன்று | 23 |
| தாடிக்கு சொந்தக்காரி | 24 |
| பரதேசிகள் | 25 |
| இளமைக்கு வேண்டாம் | 26 |
| முருகமுற்றம் | 27 |
| என் கவிதை | 29 |
| தேடல் | 30 |
| தருசாகி | 31 |
| பெருமாளே | 32 |
| அரபுதேச அழகு | 33 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| வருவாயா.. | 34 |
| வீணாகும் உணவு | 35 |
| கரு விழியாள் | 36 |
| கூலி | 36 |
| மூச்சு | 37 |
| ஒன்றே குலம் | 37 |
| அழியும் கலாசாரம் | 38 |
| எல்லாம் மாறிப்போச்சு | 39 |
| விளக்கமற்ற வாழ்க்கை | 40 |
| கோணேஸ்வரத்தானே | 41 |
| இலக்கு | 42 |
| வந்துவிடு என்னகத்தே | 43 |
| சதி வெல்லும் சாதுரியம் | 44 |
| வெளிநாட்டு உறவு | 45 |
| ஏழைத்திருமணம் | 46 |
| உயிர் விளக்கு | 47 |
| அழகற்ற அறிவுடையாள் | 48 |
| நாகபூசணி | 49 |
| முருகனின் தமயன் | 50 |
| வறுமை எம்மை | 51 |
| பத்தினி என்னை | 52 |
| விடுகதைக்கு விடைதேடும் | 53 |
| அந்திப்பனி ஆதவன் | 54 |
| மதுமீது மயக்கம் | 55 |
| போதும் என்னும் | 56 |
| விநாயகர் சதுர்த்தி நாள் | 57 |
| பாய்ந்து வரும் | 58 |
| வெளிநாட்டு வாழ்க்கை | 59 |
| ஊரின் மரத்தடி | 60 |
| தென்றல் வந்து | 61 |
| காமத்தின் பரிவு காதல் | 62 |
| வீதியில் கண்ட நிலவு | 63 |
| அவள்தான் என் காதலி | 64 |
| உழைப்பில் களைப்பில்லை | 65 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடங்கிய கனவு

கட்டிடங்கள் உயர்ந்தன
கனவுகள் காட்சியாகின
கண்டிவரை மணிநேரத்தில்
கடக்க வாய்ப்பாகின
கடல் சூழ்ந்த தீவை
கண்ணோடு காண
உலகத்தரச்சாலை
உடமையானது...
கையடக்க பேசியது
கைக்குள்ளே
அடங்கி போனது...!

## வேதனை யாருக்கு..

பெருமைகொள் தமிழா
தரணியில் முதல் இனம்
நாம் என்று
புரிந்துகொள் தமிழா
புறம் பாடி வீரம் வளர்த்த
மூத்த குடி நாம் என்று...
தெரிந்துகொள் தமிழா
தென்னகமே எம் அகமாகி
இருந்தது என்று...
விழித்துக்கொள் தமிழா
நாம் விட்டு வந்த தவறில்
வேதனை யாருக்கென்று...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவகலாது

பத்து மாதம்
பத்திரமாய்
பாசத்தோடு
சுமந்து பெற்று...!

பார் போற்ற
பாலகன் வாழ
நாள் தோறும்
அடுப்பங்கரை
தீயில் காய்ந்து...!

பாதி வயிறு
தான் உண்டு
எம் பாசத்தை கொண்டு
மீதி வயிறு நிரப்பி
உன் மேனி சோர்ந்த போதும்...!

சோராத
உன் உழைப்பில்
எம்மை ஆளாக
வளர்த்தவளே...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகாளும்
ஈசனுக்கு
நிகராகும் உன்
கருணை
கல்வி கற்காமல்
இருந்தாலும்
கடை கடையாய்
உணவு போட்டு
பெற்று வந்த
சில்லறை காசில்
சிரத்தோடு
கல்வி தந்த
சரஸ்வதியே....!

பணம் என்றில்லாமல்
நற் குணம்
நன்றென்று
வாழ்ந்து சொன்ன
குணவதியே...
உயிரோடு உடல்
இருக்கும் வரை
உறையாது உன்
நினைவு உள்ளத்திலே.....!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசான்

என் தாய் காட்டிய
பாதையில்
உங்கள் காலடி வந்தேன்.
நீங்கள் காட்டிய சாலையில்
எனக்கென்று ஒரு
வழி அமைத்தேன்.
வீணாகி போகாது.
நீர் பட்ட கலக்கம்
விடை தேட சொன்ன போது
விளங்கவில்லை..
எமக்கு
வாழ்க்கை கேள்விக்கு
விடை கொடுத்தோம்.
நீர் நடந்த வழி கண்டு
புகழ எமக்கு வார்த்தையில்லை
படும் போது
தெரியும் என்றீர்
பட்டதனால்
சொல்கின்றேன்
நீர் போட்டது சாபம்
அல்ல
நாம் தலைநிமிர்ந்து
வாழ நீங்கள் இட்டது வேதம்
ஆசான்களே..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதை மோகம்

போதை
போதையில் சில
மேதைகள் கூறிய
கீதையில்
சீரளிக்கும் பாதையில்
சாதிக்க பிறந்த
சந்ததி சாராயம் தேடி
போகுதே
இதுதான் மாற்றமா
இளைஞர் கூட்டமே
சாதித்த சத்திரியன்
சங்கிலியன்
சந்ததி நாம் அல்லவா
சாதனைக்கு தடையான
போதை விட்டு
மேதையாக வா
சகோதரா
சாதிக்க
மேற் சட்டை
கழற்றி கோயில்
நுழையாது வெட்கப்படும்
புதிய தலைமுறை
கஞ்சாவின் போதையில்
காட்சட்டை கழர
வெட்கமின்றி கிடப்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன விதிமுறை
இதை கண்டேன் பலமுறை
விடுமுறை தோறும்
இதுதான் நடைமுறை
ஆகவிடும் பொதுமுறை
இதுதானா சாதனை..
போதை மீது நீ கொண்ட
மோகமே
உன் சாதனைக்கு
தடையாகுமே
இது தான் உண்மையான
வேதமே
போதை தாண்டி வா தோழா
சாதிக்கவே
புதுயுகம் படைக்கும்
இளைஞர் கூட்டத்தை
மாற்ற முடியாத
புற்று நோயில்
மாட்டிக்கொள்ள வைத்து
அவன் கையிடைக்குள்
மாட்டிக்கிடக்கும்
ஆறாம் விரலின்
புகையில்
அவன் எதிர்காலம்
கருகிப் போகிறதே...
வேதனையின்றி
புகைகிறதே உன் பணம்
சாதிக்க துடிக்கும்
உன் உடல் போய் விடும்
சீக்கிரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறிவிடு வெகு சீக்கிரம்...
வருவான் என் அப்பன்
ஓரு வாய் உணவு கொண்டு
ஏங்கி நிற்பர்
ஏதிர் கால வாரீசு...
வருத்தத்தோடு
வீட்டு வாசலிலே...
வருமானம் வறட்சியிலே
வருவான் அப்பன்
போதையிலே...
பசியோடு எப்படி
படிப்பர் இரவிலே ...
உலகதிர
அப்பன் போடும்
கூச்சலிலே...
சந்ததி எப்படி
சாதிக்கும்
போதை நிறைந்த
உலகத்திலே...
வர வேண்டும்
சமூகமே போதையற்ற
உலகு வேண்டி
சாதிக்க துடிக்கும்
இளைஞர் நலம் நாடி
மேடை ஏறி பாட்டு
பாடும் பாடகனும்
பட்டம் பெற்று சட்டம்
சொல்லும்
பேச்சாளனும்
போதையின்றி ஏற மாட்டார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேடையிலே...
கூற மாட்டார் கருத்து
இவர் பேசுவது
சுய புத்தியிலா
சாராய புட்டியாலா
தந்த மது போதையிலா
மேதைகளே போதை
வேண்டாம் பூமியிலே
சாராயம் சாப்பிடாமல்
சட்ட சபை ஏறாத
சண்டாள பாவிகளும்
பல வித போதைகளை
பாட்டாளி நாட்டுக்கு
பரிசாய் தரும்
பட்டு வேட்டி கட்டிய
பாரளும் பாடுபாவிகளும்
உள்ள திருநாட்டில்
போதையற்ற சட்டம்
எப்படி வரும்
எம் நாட்டில்
சாதிக்க துடிக்கும்
இளைஞன் கூட்டம்
போதையற்ற நாடு வேண்டி
போக வேண்டுமா...?
போதையிந்த நாட்டை விட்டு
போக வேண்டுமா...?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுகதையோ

சாலை ஓரம்
மாலை நேரம்
உழைப்பாளி வீடு நோக்கி
செல்லும் காலம்...

பகலவன்
கதிரொன்று
பச்சை வயல்
மேனி தொட்டு
காட்சி தரும் நேரம்...

கதிரவன்
ஒளி அழகை
ஓரங்கட்டும்
ஒளி நிலா முகம்
கொண்டு வீதியிலே
போறவளே....

என் விதிக்கு
விடை தேடி தருவாயோ.....
இல்லை விடுகதையாகி
விடுவாயோ...?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏக்கம்

அன்பான பிள்ளை
அன்னிய நாட்டில்
அவனுக்கு
அழகாக பார்த்தவளும்
ஆவணியில் போய்விட்டாள்
அவனோடு குளிர்நாடு..
தனியாக இருக்கிறேன்
எட்டு பிள்ளை பெற்ற
தாய் நான்
அன்பான சொந்தமெல்லாம்
அன்னைவிட்டு போன பின்னே
வாசலில் அன்புப்பறவைதான்
அன்னைக்கு ஆதரவு
அந்தரங்க வேதனை எல்லாம்
ஆண்டவனுக்கும்
வாசல் கூட்டில்
சத்தமிடும்
அன்புக்குருவிக்கும்
தான் தெரியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் செய்வோம் நாம்

நாம் பெற்று வந்த பாடம் அதிகம்
வேலையொன்று பெற்றுவிட போகையிலே
பட்டம் கேட்கும்
சட்டம் எம்மை
படிக்காதவன் ஆக்கிவிட்ட சோகம்
நம் இனம் இரத்தம்
சிந்திய வேளை
நீங்கள் இங்கிலாந்தில்
பட்டம் பெற்றீர்கள்
எம் சோகம் படித்திருப்பீர்கள் என்று
சட்ட சபை ஏற்றினோம்
நம் கஸ்ரங்களை போக்குவீர்கள் என்று
கணிதத்துக்கு சித்தியும்
ஆங்கில சித்தியும்
அப்போது எங்கே கிடைத்தது
உடம்பில் காயமும்
உள்ளத்தில் சோகமும்
மிச்சம் கொண்டு வந்தோம்
இதற்காக இயற்றுங்கள்
சட்டம்
எமக்காக ஆக்குங்கள்
திட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லாம் அன்பளிப்பே

போரோய்ந்து பல
ஆண்டாச்சு
வேரோடு அழிந்த
எம் சொத்தும் மீண்டும்
வராமலே போச்சு...
பாதை எல்லாம்
வெறிச்சோடி கிடக்கு
காணிக்குள்
காடு செழித்து கிடக்கு
காணாமல் போன
உறவுகளை காண
உள்ளங்கள் ஏங்கிக்கிடக்கு...
போரில் போன
சொந்தத்தை எண்ணி
நித்தம் ஒரு நினைவு
எம் இதயத்தை
வருத்திக்கிடக்கு
புதுசாய் பல முகம் ஊரில்
எம்மை புதுசாய் பார்க்கும்
பல முகம் தெருவில்
கல்லாக கட்டடம்
திட்டத்தில் வந்தது
கருணையாக கிடந்த
மனங்கள் கல்லாகி கிடக்கு
சந்தியில் கூடி சங்கதி பேசி
பல சீர்திருத்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்கிய
இளைஞர் கூட்டம்
சாராய பந்தியில் கூடி
சந்ததி சீரழிக்கும்
சதிகார திட்டம் ...
இப்ப சடங்காக கிடக்குது
சொல்ல முடியாத
துயரத்தில்
விதவை பெண்
உணர்வுகள்
விடை தேடாமல் கிடக்கு...
அங்கம் இழந்த
அனைவர் இதயமும்
அளக்க முடியா துயரத்தில்
அநாதையாய்
கிடக்கு...
வருங்காலம் எண்ணி
வயசான பாட்டி
வழிதேடி
வாரிசு விட்டு போன
சொந்தம் காண
முதியோர் இல்லத்தில்
வாடிகிடக்கு
அனைத்தும் போர் தந்த
அன்பளிப்புக்கள் தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எது விதி

சேற்றில் மலர்ந்த
செந்தாமரை அழகாம்
சேற்றங்கரை சேரியில்
பிறந்த நாம் அழுக்காம்
சேர மாட்டார்
எம்மோடு ஒழுக்கமும்
இல்லையாம்
சேற்றில் தாமரை
மலர்வது விதி
சேரியில் நாம் பிறந்தது
யார் தலைவிதி...!

## விசமற்ற விவசாயம்

நிகழ்கால சிட்டுக்களே
வருங்காலம் நீங்களே
எதிர்கால அரசர்களே
ஏரோடு தமிழ் கொண்டு
வாழவேண்டும் புகழ் பெற்று
விண்தொடும் அறிவியல் பெற்று
மாற்றவேண்டும்
விசமற்ற விவசாயமுறை கண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏது பதில்..?

வெண்ணிலவே
எல்லா கவிஞன்
கற்பனைக்கு உவமையாகி
உன் உண்மை அழகு
உணராமல்
ஊர்விட்டு போனாயோ..?
அல்லது என்
அவள் வதனம்
கண்டு
வெட்கத்தில்..
வாடி மறைந்தாயோ..?

# மௌனம்

சில கேள்விக்கு
பதில்கள் மௌனம் தான்
உள்ளத்தின் மௌனம்
பல கேள்விகளின் இருப்பிடம்
மௌனம் கலையும் போது
காதல் மலரும்,
காதல் கலையும் போது
உள்ளம் நிரந்தர மௌனமாகும்.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரவல் இருப்பிடம்

நாநிலமும்
ஓரிடத்தில்
ஒன்றாக
கூடி கிடக்கும்
குட்டி குமரிகண்டத்தின்
குறு நில சொந்தக்காரர் நாம்,
குடியிருக்க
குடிலின்றி
வாடகை துண்டில்
குடிசையில் குடியிருக்கிறோம்
கும்பிட்ட கோயில்
எல்லாம் கைவிட்டு விட்டது
குறுக்கால போன
அரசியல் நம் நிலத்தை
துண்டாடிவிட்டது...
தம்பதேனி காலத்தில்
தனியாக போயிருந்தால்
நம் பலாலி நமக்கே
இருந்திருக்கும்
மீன் அள்ளும்
கடல் வழமும் ...
நிலம் நிறைய
விதைத்த பயன்
மனம் நிறைய
விளைச்சல் தரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத நிலமும்
பச்சை வெளியாய்
பரந்துகிடக்கும்
நம் பலாலி
எப்போ வரும் எம்மிடம்
சுவாமி.... நாதா....
நாம் இருக்கும்
சுற்றத்தை பார்த்தாயா...
பரதேசி போல்
இருக்கிறோம்
இரவல் இருப்பிடத்தில்...

## தர்மம்

முடிவு தொடக்கத்தின்
முதல் ஆரம்பம்....
முடிவில் தர்மத்தின்
விதையே!
முதல் வரும்
தொடக்கத்துக்காக
விதைக்க படின்
தலைமுறை
தர்மத்தின் தடத்தில்
தலை நிமிரும்.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடக்கப்பட்டவள்

தாசி வேசி...
என பேசி...
ஏசிப்பழக்கி...
அது பழந்தமிழ்
பண்பாடு என
புராணம் கூறி...
மாறி மாறி...
நீங்கள் கூறி....
ஏமாற்றி ..
சொன்ன அடிமைக்கதைக்கு
காறித்துப்பும்
காலம் இது....... அவளை
ஆடவன் மோகத்துக்கு
அடிமையாக்கி........
அவள் சுந்தர
வாழ்வை இருட்டாக்கி....
செப்பிய கதை
எல்லாம் நீரே....
உருவாக்கி....
வீர தமிழ்ப்பெண்ணின்
விருத்தியை மறைத்து...
முடக்கி ....
விட்டீரே
முன்னோரே...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கெடுத்துவிட்டுப் போனவன்

கறுப்பான என் அழகை
காணாமல் போறவரே
உன் மேல்
விருப்பாக இருக்கிறேன்
என உரைத்து போவீரோ...
விழியோடு வலி கொண்டு
கண்ணீரோடு காத்திருந்தேன்
கனடாவுக்கு போனதுமே
கடிதம் போடுவேன்
கந்தனையும் கற்பூரத்தில்
சாட்சி வைத்து
போனாயே...
பிள்ளைக்கு பிறப்புசாட்சி வைக்க
கடதாசி அனுப்பி வைத்தேன்
என் மானம் பாராமல்
படித்தே பார்க்காமல்
யாரோ பிள்ளை என்றாய்
நம்மை தவிர
சத்தியம் யாருக்கு
தெரியும்...
நாளைக்கு உனக்கு திருமணம்
நலமுடன் இருக்கான் உன் மகன்
ஒரு முறை வருவாய் எம் அகம்
மறுமுறை மறுக்காய் குழந்தை முகம்
உன்னை போல் இருக்கு அவன் முகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியாகம்

புகழ் தேடி
பணம் வேண்டி
பல பொய் கூறி
பூமியில் தரம்
நாடிய பின்
தாயே உன்
தரம் கூற
என்னை முத்தாக
பெறவில்லை...
வறுமை வாட்டிய போதும்
தத்தாக கொடுக்கவில்லை
விறகு தீயில்
வியர்வை சிந்தி
பல கேள்விக்கு
விடை தேட
விதி மாற்றி உன்
விருப்பங்கள் விலக்கி
எம் விருத்திக்கு
விரதம் கொண்டாய்...
விலகாத உன் அன்பால்
என் உயிர்
விண் சென்றும்
மறவாது உன்
வீணாக போகாத
தியாகத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓடாத வெளிநாடு

அப்பனுக்கு ஆசை
அடுத்த அறுவடையுடன்
அடியே உன்னை
ஆடவன் ஒருவன்
கரம்பிடித்து கொடுக்க...
பாரதி கண்மணியே
பாடம் படித்து
பார் போற்றும்
பட்டம் பெற்று
படிக்காத உன்
அப்பன்
பரம்பரையின்
பாட்டாளி என்னும்
பட்டம் மாற்ற...
உன் பிஞ்சு பாதம்
புண்பட நடந்த
வரம்பு சாலையை
மகிழுந்து ஊரும்
சொகுசு சாலையாக்கு
வயல்காட்டை
உயர் தர விளைநிலமாக்கு
பட்டம் பெற்று ஓடி
விடாதே..
வெளிநாடு
மாற்றி விடாதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயல்காட்டை
மேடாக்கி மாடியாக்கி
தருசாக்கி வீணாக்கி
விடாதே.....
உழுது உன்
அப்பன் பசி
ஆற்றிய
ஆறுயிர் நன் நிலத்தை

## வாழ்க அகம்

வருவதும் போவதும்
செல்வம்...
அதை நித்தம்
பெறுவதற்கு கடலும்
தாண்டிச்செல்வோம்
எங்கும் சென்றும்
உழைப்போம்....
உதிரம் வியர்வை கலந்து
உறவின் முகங்கள் மறந்து
உடலின் உழைப்பை கொடுத்து
ஊதியம் உறவுக்கு அனுப்பி
அகத்தில் மகிழ்ச்சியை நிரப்பு
வாழும் வாழ்வை
ஊருக்கும் உறவுக்கும்
தரும் உழைப்பாளி
அகம் வாழ்க.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் என்று

ஆளிடை தொடர்பை
ஆடவன் எனக்கு

ஆதவன் கூரிய
கதிர் போன்ற - உன்
அழகிய கண்ணிடை
தொடர்பில்
புரியவைத்து
பாலாடை நிறத்தழகில்
அழியாத உன் - அழகில்
வாடாத வாலிபத்தை
வருடாமல் வதைப்பவளே...!

வந்துவிடு காதல்
மொழி கொண்டு

அனுமதி தந்துவிடு
உன் கணவன் நானென்று...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாடிக்கு சொந்தக்காரி

வானத்து வெண்ணிலா
வஞ்சமில்லா பாலிலா நனைந்தது
கண்டவுடன்
காளையர் மயங்கும்
கன்னியே
யாருன்னை பெற்றது...?
ஆடவர் துன்பம்
அறியாமல் யாருன்னை
வீட்டை விட்டு
வெளியே விட்டது...?
வயசான கோமகனும்
வஞ்சியே உன்னை
வழி கண்டு
விழி வைக்காமல்
விலக மாட்டான்...
மீண்டும் ஒரு
அகம் பாடி
சங்க காலத்தை
கலியில் காண
கவிஞர் கூட்டம்
உன்னை காண
வேணுமடி
பல ஆண்களின்
தாடிக்கு சொந்தகாரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரதேசிகள்

பசியிருந்து ஓர் உயிர்
மண்ணோடு போனது
இனத்தின் மேல் கொண்ட
அன்பால் ....

அறம் போற்றிய நாடு
உன் அறப்போரில்
பொறாமைகொண்டு
உன்னை கொன்றது
எம் இனத்தின் மேல்
கொண்ட வெறுப்பால்....

பசியிருந்து மெய்யுருகி
மெய் விட்டு உயிர்
போனதே
பசிகிடந்து சுதந்திரம்
கண்ட தேசத்தின்
பரதேசிகள் பார்க்கவே....

வெட்கப்பட்டு வேட்டியை
விற்று விடுங்கள்
கண்ணாடி தாத்தா
சிலை முன்னே...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளமைக்கு வேண்டாம்

நாம் ஏர் பிடித்து
நெல் விதைத்து
சொத்து குவித்து
சுற்றத்தின் வறுமை
போக்கிய...
வறட்சி தராத
மருத நிலத்தை
மேடாக்கி மாடி கட்டி
பொன் அள்ளும்
விளை நிலத்தை
வீணாக்கி.....
வீசா தேடி
கடல் தாண்டிப் போக....
எம் இளைஞர் கூட்டத்தை
காத்திருக்க வைத்து
நாடு தாண்டி போக வைத்து...
நடுத்தெருவில்
நிக்க வைத்து
தாய் நாடு மறக்க வைத்து
அரபு தேச
மிருகம் மேய்க்கும்
அடிமை உழைப்பு
துடிப்புள்ள இளமைக்கு
வேண்டாம்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகமுற்றம்

ஆணவம் அழிக்க
தேர் ஏறி நீ வரும்
கோலம் காண
கோடிக் கண்
வேண்டும் கந்தா!
ஐம்புலனும் இதுக்காகவா
என எண்ண தோணும்
ஐயா !
காப்புக்கடை காறனுக்கும்
காவயிறு கஞ்சி கிடைக்கும்
கந்தனே உன்
காலடியில்
கச்சான் கடை
கமலத்தின்
கடைசி மகளின்
கல்யாண சீருக்கு
காசு கிடைக்கும்
கந்தனின் திரு
காலத்தில்
வரம் தேடி
அலையும் வடமராட்சி
வரதன் மகளுக்கு
கந்தனின்
வடக்கு வீதியில்
வறணி புறோக்கரிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரன்
பேசி முடிப்பார்
வசாவிளான் வைத்தியருக்கு...
காதலியின் சேலை
அழகில் !
அடுத்த ஆண்டே
திருமண ஆயத்தம்
செய்வான்
அகத்திலே அவள்
காதலன்...
முத்து மணி மாலை
வேண்டி
முத்தமிட ஆசை ஊட்டி
அவள் தோள் சாய்ந்து
உடல் ஒட்டி
மெட்டி வாங்க
பெட்டி கடை போகும்
சண்டிலிபாய் புது
மணச் சோடி...
முருகன் சேவடியில்
அவன் தேரடியில்
தேரோர சிவரடியில்
காலடியில் காலடி பட
ஊர் கண்ணடி
அவர்களடி பட
யாரடியும் தெரியாமல்
ஒரடியாய் இருப்பர்
முருகா உன் சுற்றத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் கவிதை

என் கவி
எதுகையும்
மோனையும்
ஏற்றிருக்க...

மறுப்பினும்
என் விழி வடித்த
கண்ணீர் வரியாகி...

கடதாசியில்
கவிதையாகி
இதயத்தின்
கனம் குறைக்கும்...

வாலிபோல் கவி
வடிக்க வரம்
கிடைக்காவிடினும்
வாலிப சிந்தனை
வராவிடினும்
அடுத்தவர் வலி கண்டு
என் உள்ளம்
துடிக்கு கணங்கள்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காகிதத்தில் கவிதையாகி
கண்ணீரை
கட்டுப்பாடாக்கும்
என் கவிக்கு
இசை சேர்க்க
இதம் இல்லை
எனினும்
இதயத்தின் ஓரத்தில்
இருளாய் கிடக்கும்
விடியலின் .....
ஒளியின் கீற்றுக்கள்
கிறுக்கல் ஆகும்...

## தேடல்

வெளிச்சம் தேடிய
ஈசல்கள் விடியும் முன்னே
பார்விட்டு விண் செல்லும்...
விடியல் தேடிய
உள்ளங்கள் விடைகாணும்
முன்னே விண்ணுக்கு
விடை கொண்டாலும்
தேடல் முடிவதில்லை ...
விடை கண்டாலும்
விடையில் இருந்து
கேள்வி பிறக்காமல்
விடுவதில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தருசாகி

யானை விரட்டி
சேனை விளைவித்து
பானை நிறைய
விளைச்சல் அள்ளிய
கூட்டம்...

மாலை மடிய
மண்டியிடா
மண் வீரம் பாடி
வளர் துளிர்
உரம் பெற
ஊட்டம் கொடுத்த
பூமி விட்டு
கடன் வேண்டி
கடல் தாண்டி
துணையின்றி
உளச்சுகமின்றி
பணம் நாடி
நீ கிடக்க...

எம் நிலம் தருசாகி
தெங்கினம் சருகாகி
போகுதே...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருமாளே

பார்தா பாரத
போருக்கு
பார்தனின் தேர் நடத்தி
போன கோலமே
பக்தர் குறை தீர்க்க
பகவானே நீ வரும்
கோலமோ...
கோடி நாடி
கோயில் வரும்
கூட்டத்தில்
கோவிந்தா
உன் சேவடி தேடி
ஓடி வருவேன்...
ஏழை என் வாழ்வில்
ஏற்றம் காண
நித்தம் படி
ஏறுவேன் ...
என் சித்தம் முழுவதும்
உந்தன் எண்ணம்
கொண்டே
கோவிந்தா குறை தீர்ப்பாய்
எந்தன் பக்தி மீது
அர்த்தம் கண்டே... .
நாராயணன் கோவில்
கொண்ட ஊரே...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் இருக்கும் ஊரே
நாம் கொண்ட பேறே
உன் திருவடி
தரிசனம்
தினம் காண்பேன்
திருமாளே ....
அது நான் பெற்ற
திருவே......

## அரபுதேச அழகு

நிலவு நிழல்
தேடி நீல வானை
திரையாக்கி
தலை மேல்
சுற்றிய சேலை
அரபு தேசம்
அறத்துடன் தரும்
அழகிய கலாசாரம்
ஆகியதோ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருவாயா..

நான் மனம் உடைந்து
போனேன் என்று
என்னை மணம் முறித்து
சென்றவனே.....
என்ன பணம் வந்த போதும்.....
என்னை பாவம் என்று நீ
பார்த்த போதும் என் மனம்
வளம் அற்று போனதே...!
பொருள்  அற்ற வாழ்விலே
மறுபடியும் வருவாயா
வீணாகும் உணவு....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீணாகும் உணவு

உயிர் வாழ
உணவுக்கு போராடும்
உயிர் உள்ள உடல் கூடு
உட்குழிந்த கண்ணோடு
ஊட்டமிழந்த உடலோடு
உணர முடியா வலியோடு
ஏங்கி நிற்கும் உள்ளம் கொண்டு
வாழ்க்கை விதி என கொண்ட கூட்டம்
உண்டு உணர்வு கொண்டு
உணர்வீர் உணவை வீணாக்காதீர்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கரு விழியாள்

காலை பொழுது அவள்
சேலை அழகு
மலை ஓரம் பட்டு
பாவை முகம்
தொட்டு வரும்
அலை மகளின்
காதல் தலைவன்
கதிரவன் கதிரொளி
என்மீது படாதோ
கருவிழியாளே .....
காத்திருப்பேன்
என் விழிமடல் சேராமலே....

## கூலி

கூலிக்காகவே
எம்மை
வேலிக்குள்
ஒடுக்கி வைத்து
எளியவர் கூட்டம்
என்று எம்மீது
இரக்கம் காட்டி
ஏழையின் வாழ்வை
இருட்டில் தள்ளாதீர்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூச்சு

முடிஞ்சு போன
வாழ்வை
முடிச்சுப் போட்டு
தொடக்கி
வைத்தோம்
மூச்சடங்கி போன போது
உயிர் மூச்சை
உள்ளெடுத்து
உயிர் வாழ்வை
உருவாக்கி வைத்தோம் இனி
உலகுக்கு உண்மையை
உணர வைப்போம்

## ஒன்றே குலம்

மனிதம்
மாறுபட்டது
மனங்கள் வேறுபட்டது
மதங்கள் தனிப்பட்டது
மார்க்கம் பொதுப்பட்டது
வேதங்கள் வேறுபட்டது
வேதியலில் மனித
உடல் ஒன்றுபட்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழியும் கலாசாரம்

பரம்பரை மறந்து
பாரம்பரியம் வெறுத்து
பெண் அடிமை
அது உரிமை
என்று பேசுவது
வெறுமை
தமிழ் பாடம்
மறந்து...

மீசை மழித்து
வேட்டி வெறுத்து
கூடிக்கிடந்த
குடும்பம்
குறைத்து...

மதி மறக்கும்
மதுவை ஏற்று
நீ மாறுபட்டது
மறந்து...

பெண் சேலை மறந்து
தன் உள்ளம்
பிடித்த ஆடை
ஏற்றது கலாசார
அழிவா...?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லாம் மாறிப்போச்சு

ஆழக்கிணற்றில்
நீர் அள்ளி
அதி காலையில்
நீராடி...

ஆண்டவன் அடியை
அர்ச்சித்து....
அப்பனுடன் வயலில்
நீர்பாச்சி...

வரம்புகரையில்
நடைபோட்டு
பள்ளிக்கரையில்
பாடம் பயின்று....

கலாசாலை கண்டோம்
கஸ்ரத்தோடு
வருமானம் கண்டோம்....

கல்விக்கலை யோடு
எல்லாம் மாறிப்போனது
போரோடு
எதிர்த்து நிற்கிறோம்
கவலையோடு...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளக்கமற்ற வாழ்க்கை

மலிந்து கிடந்த
மனித நேயம்
மருந்தாகிப்போனது
மன்னராட்சி
மாறி மக்கள் ஆட்சி
உதயமான பின்னும்

வங்கி கணக்கு
பெருகுது வட்டிக்கடை கூடுது
வாகன நெருசலிலே
பிச்சை எடுப்பதும் கூடுது

பண ஆசை வந்த பின்னே
பகிரும்மெண்ணம்
பாதை மாறி
பங்குச்சந்தையில் பணம் போச்சு
ஏழையின் நிவாரணமும்
நிண்டுபோச்சு

நிலையற்ற வாழ்க்கை மீது
நிரந்தரமாகும் சிந்தனையில்
நிலையான புண்ணியத்தை
புதைகுழியில் போட்டாச்சு
விதியென்று விட்டாச்சு
வினைகளை பெற்றாச்சு
பல பேர் கூறி போயாச்சு
விளக்கமற்று வாழ்க்கை போயே போச்சு...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோணேஸ்வரத்தானே...

நாள் எல்லாம்
நாதங்கள் கொண்டு பாடுவேன்
நமசிவாய என்னும் நாமத்தை
நாள் தோறும்
நலம்காண வேண்டியே

நம்பிக்கை உன் மீது
தும்பிக்கையான் தந்தையே
நலம் அருள்வாய் எம் மீது

தில்லையில் உறைபவனே
சிற்றம்பலத்தானே
தித்திக்கும் உன் கருணை
திக்கெட்டும் கிடைக்கெட்டும்
நிம்மதியற்று கிடக்கும் பூமிக்கு
நித்தியம் நிரம்பட்டும்
பார்வதி துணைவா
பாரில் பாசம் பரம்பல் ஆகட்டும்
மலைமகள் திருவே
மனிதன் மனிதம் காணட்டும்
புனிதத்தின் புதுமையே
பூமி அமைதியாகட்டும்
புலரும் காலை காடுடைய
சுடலை பொடி
பூசியவா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழையின் நிலையை மாற்றித்தா
வேடுவ உருக்கொண்டு
தனஞ்சயன் தவம் கலைத்தவா
தர்மம் அமைய
பிரம ஆஸ்திரம்
கொடுத்தவா
கோயில் கட்டி பூசிக்கிறோம்
கோணேஸ்வரனே குறைதீர்க்க
ஓடிவா... ஓடிவா..!

## இலக்கு

நீ காட்டிய வழியே
நான் எழுந்து வரவே
உரம் தருவாய்...
உதிரமும்
வியர்வையுமாகவே
நான் ஆக விரும்புவது
உன்னை போலவே
நீ என்னை மாற்ற
நினைப்பது
உலகம் போற்றவே
நான் அடையும்
இலக்குக்கு போராட
இருப்பாய் துணையாகவே
அதுவே உன் இலக்காகவே...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வந்துவிடு என்னகத்தே

நாரைகள் பறக்கும்
வயல் வெளி
நாணல்கள் இடையே
நறுமனம் தரும் புல்வெளி
கிளிகள் கீதம் இசைக்கும்
மருதமர சோலை வெளி
உன்னை காணாமல் என் இதயம்
ஏங்கும் வலி
புரியாமல் போகாதே
என் நெஞ்சம் தாங்காதே
நீயின்றி போனாலே
கண்மணியே உன் நினைவு
என்னை விட்டு போகதே

மலரும் தாமரை
மங்கையுன் வதனம் கண்டு
வாடிவிடும் தாரகையும்
தன்மதி வந்ததென்று
மேற்கு நோக்கி ஓய்வெடுக்கும்
இராவண காலத்தில் நீயிருந்தால்
இராமாயன காவியம்
வந்திருக்குமா
கம்பன் புகழ் கண்டிருப்பான்
உன்னை இரவணன்
கொண்டுசெல்ல வந்திருப்பான்
உன்னை அடைய என் உயிர்
தந்திருப்பேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விபரித்து விட்டேன்
உன் அழகை
விடை சொல்லி
சொல்வாய் என் அகத்தே
மனம் வாடிக் கிடக்கிறேன்
மண்ணகத்தே
விண்ணகம் செல்ல முன்னம்
வந்து விடு என்னகத்தே...!

## சதி வெல்லும் சாதுரியம்

சகுனி சதியில்
பாரத வீரர்கள்
உதிரம் செங்கடலாகி
உயிரற்ற உடல்கள்
இமயம் போல்
குவிந்தது...
விபீசன் சதியில்
இலங்கை இருள்
ஆனது...
உண்மை மறைவானது
உலகில் சதிகள்
சரித்திரத்தில் சாதித்தது
சதிகளை வெல்வதே
சாதூரியம் ஆனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டு உறவு

ஊர்விட்டு ஊர்வந்து
உறவுகளை விட்டுவந்து
உணர்வுகளை தொலைத்துவிட்டு
உறையவைக்கும் குளிர் கண்டும்
உடையாத மனது கொண்டு
உறங்காமல் உழைத்து வரும்
உறவுகளே...

உண்மையான தியாகம்
கொண்ட உள்ளங்களே
அரபுதேச சுடுமணலும்
ஆற்றாமல் நீர்
அழுத கண்ணீரோ
அரபுதேச சின்ன பசுமைக்கு
காரணமோ...

விடியும் முன்னே
விழித்துக்கொண்டு
விறைக்கவைக்கும்
குளிருக்குள்ளே
விசாவுக்கும்
பயந்து கொண்டு
பாச உறவுகளை
நினைத்துக்கொண்டு
குளிர் அறியாமல்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பங்கள் நலம் காண
குருதியை
உறையவைக்கும் தொழிலை
ஏற்ற பெருமைக்குரிய
உறவுகளே
பெருமைகள் உங்களுக்கே...

## ஏழைத் திருமணம்

பணத்தின் தரம்
திருமணத்தை வரமாக்கும் போது
இருமனம் இணைவது
திருமணம் என்னும்
பொருள் பட கூறின்
பொருள் அற்று போகுதே
இன்று
பொருள் கொண்ட
கூட்டம்....
பண்பாட்டை பணமாக்கி
ஏழைப் பெண்ணின்
வாழ்வை இருள் ஆக்கி
பழந்தமிழ் பண்பாட்டை
இழிவாக்கி போகுதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர் விளக்கு

மழைதருவாய்
மண்ணில்
மக்கள் வாழ்வில்
மகிழ்ச்சி தருவாய்
விளைச்சல் எங்கும்
பரவச்செய்வாய்
விண்ணில்லிருந்து விடியல்தரும்
வித்தகனே
அணையாது நீ ஒளிர்ந்து
அகிலத்தை காப்பவனே
அன்பான எங்கள் நன்றி
உனக்காக இருக்குமாய்யா

உலகப்பந்தின் இயக்கத்தின்
உண்மையே
உயிர் பிறப்பின்
சாஸ்திரத்தின்
உயிர் விளக்கே
ஓய்வின்றி உன்
ஒளியில் பூமிப்பந்து
வாழ்திடுமே
வாழ்நாளில்
உன் அருளை
உயிர்கள் யாதும்
மறக்காதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகற்ற அறிவுடையாள்

மான் விழியாள்
மலர் போன்ற தேன் மொழியாள்
மதி கொண்ட முகமுடையாள்
என சங்கத்தமிழ் கூறும் கவிக்கு
உவமையுடையாள்...

என் தங்கத்தமிழ்
தலைகுனிந்த போது
பொங்கியெழுந்த
புறத்தமிழ்பற்றுடையாள்....

பொருள் இழந்த ஏழ்மையுடையாள்
பணமற்றதால்
உறவிழந்த ஊனமுடையாள்...

களத்திலே
அங்கத்தை கொடுத்ததால்
ஊனமெனும் பெயருடையாள்
தனியார் வங்கியில் பணிபுரியும்
அழகற்ற அறிவுடையாள்....

பட்டமற்ற வேலைதேடி
பல நிறுவனம் ஏறி இறங்கி
சொந்தத்தொழில் ஏதுமின்றி...
சேர்த்துவைத்ததேதுமின்றி
வருவாய்க்கு வழியுமின்றி
வாசலிலே நிக்கிறேன் நாதியின்றி...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாகபூசணி

வரலாறு வரலாறாய் உன் புகழ்
இருக்கு உன் திருவடிதேடி
வந்தவர் வாழ்வில்
நிம்மதி நித்தம் இருக்கு...!

பண்ணோடு பதிகங்கள்
பல உனக்கிருக்கு
பாசத்தில் பாடுகின்றேன்
பகவதியே உனக்கு
உன்மீது பக்தி கொள்ள
எனக்கும்
இடமிருக்கு
கண்திறந்து பார்ப்பாயே
கருணையுள்ளம் உனக்கிருக்கு...!

மணிபல்லவ தீவின்
மகாராணியே
மங்காத புகழ் கொண்ட
நாகபூசணியே
நரன்கள் நலம் காண
நயினையம் பதியிலே கோவில் கொண்ட
நாராயணன் சோதரியே...!

நம்பினவர் நலம்காண
நல்லருளை தாருமம்மா
நாகபூசணி தாயே
நலம்யாவும் அருளுமம்மா...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகனின் தமயன்

வேதத்தின் முதல் பொருளே
வேண்டுவார் குறைதீர்க்கும்
வேளமுகனே...

கற்சிலையில் உருவான
கணபதியே
தமிழ் சொற்தொடரில்
பாடுவேன்
எப்பிழை வரினும்
ஏற்றுக்கொள்வாய்
மெய்ப்பொருளே...

சித்தர் பாடிய
சித்தி புத்தி நாயகா
சித்தம் சொன்ன
பாரதம்
எழுதிய பாவலா...

முக்கண் முதல்வனே
முருகன் தமயனே - எத்
தடைவரினும்
விடைதருவாய்
வித்தகனே
சக்தி சிவன் பாலகா
சரணடைந்தோம் நின் பாதமே
அருள் தருவாய் நாதனே...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வறுமை எம்மை

வறுமை எம்மை
சிறுமையாக்கிப்போனது
ஆசைகள் எல்லாம்
அடையமுடியாமல் போனது
வேதனை மட்டுமே மிச்சமாய்யானது
விதியென்று சொல்லியே காலமும் போனது
கடவுளை நம்பியே வாழ்க்கையும் ஓடுது
பாற்கஞ்சி குடிக்க பட்ட துன்பம் நாவலாய் போனது
பாற்கஞ்சி மேல் ஆவலாய் உள்ளது
உழைக்கும் போது...
படும் துன்பம்
ஊதியம் காண மறையும்
உழைத்த வியர்வை உலரும்
முன்னே ஊதியம் முடியும்...
விடியும் முன்னே மீண்டும் உழைக்க தூண்டும்
துயரம் துரத்திக்கொண்டே இருக்கும்
இதயத் துடிப்பு இருக்கும் வரை உடல்
உழைத்துக்கொண்டே இருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்தினி என்னை

பத்தினி என்னை
பக்கத்துணையாக்கி
எப்பிணி வந்தாலும்
என் பக்கமாகி...

நான் கற்பிணியாகி
இருக்கிறேன் யார்
இதுக்கு காரணம்
நீகாணும் சந்தேகம்...

உள்ளத்தில் நான் காணும் சோகம்
நீ உணர்ந்திட மறுப்பது பாவம்
என் மீது உனக்கென்ன கோபம்
புரியாமல் தவிக்கிறேன் நானும்...

உண்மை உனக்கும்
எனக்கும் தானே தெரியும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுகதைக்கு விடைதேடும்

விடுகதைக்கு விடைதேடும்
வாழ்வில்
விளையாட்டாய் போன
என் கனவுகளை
விதியென்னும் ஏமாற்று
வித்தையில்
தேடுகின்றேன்
விளக்கம் கெட்டவாளாய்...

வியாபாரமாகிப்போன
விவாகச்சந்தையில்
விற்கப்பட்டவள்...

விருப்பங்களை கனவுகளில்
விம்மிவரும் சோகத்தை விழிகளில்
விடுப்பு கேக்கும்
விஞ்ஞான உலகம் சொல்லும்
பழிகளை அகத்தில்
வீட்டில் இரவுகளை கண்ணீரில்
இருந்தும் வாழ்கிறேன்
குழந்தயின் சிரிப்பில்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்திப்பனி ஆதவன்

அந்திப்பவணி
அயரும் நொடி ஆதவன் மஞ்சலொளி
அலைகள் மெல்லப்பாடி
தரைதொடும் படி
முட்டிச்செல்லுமடி
உன் அழகு கண்டு
வெட்க்கிச்செல்லுமடி...
வெள்ளை மணல்
உன் அழகு நிழல் மெல்லப்பட
கொள்ளைக் கணல் கொள்ளும்
என்னை விட்டு நீ பிரிய
எல்லையற்ற அலை நீரை
என் கண்ணீர் நனைக்கும்
விலையற்ற என்காதல்
நடுக்கடலில் தவிக்கும்...
குறையென்ன கண்டாய்
விடை சொல்லிப்போவாய்
எனக்கொன்று ஆனால்
நீயென்ன செய்வாய்
கண்ணீரை மட்டும்
பரிசாகத்தாராய்
கடல் தாண்டிச் சென்றாலும்
காதலை மறந்தாலும்
நலமோடு இருப்பாய்
நான் உன் நினைவோடு
இருப்பேன்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுமீது மயக்கம்

மதிகெட்ட விளக்கம்
மானம் கொண்ட
குணம் மதிப்பிழந்து போகுது தினம்
மதுவுக்காக தினம் தவம்
மனைவியின் வாழ்வு
கண்ணீர் மயம் ...
மதி கெட்ட
மனிதா மதுவால்
உன் வாழ்வு கவலைக்கிடம்
சக்தியுள்ள உன் தேகம்
சக்கரை நோயில் சரிந்து போகும்
சரித்திரம் அறிந்த சாதூரியம்
நிறைந்த புத்தி மறதியெனும்
நோயில் மாட்டி மங்கித்தான்
போய்விடும்...
தொடாதே மது
வெள்ளைக்காறன்
எம் தேசக் கொள்ளைக்காறன்
கூட்டடாச் செய்யும்
சதி நீயாக மாட்டாதே
நிர்மூலமாகும் உன் விதி
போதையற்ற தேசம்
கண்டு நிரந்தர
மகிழ்ச்சிகண்டு செய்வோம்
புது விதியொன்று...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதும் என்னும்

போதும் என்னும்
மனம் வேணும் ...
போதையற்ற நாடு வேணும்...
போகம் யாவும்
விளைச்சல் வேணும் ...
போதிய மழை பெய்திடவேணும்...

மதத்திடை ஒற்றுமை வேணும் ...
மகிழ்ச்சி பரவிட வேணும் ...
மாதர் தம் இன்னல் அழிந்திட வேணும் ...
மக்களாட்சி நிலைத்திட வேணும்...

பரதி மீண்டும்
பிறந்திட வேணும் ...
பாவங்கள் யாவும்
அழிந்திட வேணும் ...
பார்தீபன் கனவு
நனவாக வேணும் ...

பரத தேசத்துக்கு
பாலம் அமைக்க வேணும்...
பஞ்சமில்லா பார் வேணும்...
இலஞ்சமில்லா தேசம் வேணும் ...
வஞ்சமில்லா குணம் வேணும் ...
யாரும் கெஞ்சாமல் வாழ வேணும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் சதுர்த்தி நாள்

வேழ முகம்
வினைதீர்க்கும் குணம்
ஞான அகம் தான
மனம் பாதம்
பணியும் பக்தர்
எல்லாம் காணும்
இன்பம் ...
உன் அருள் உருவம்
மதமற்ற வடிவம் மரத்தடி
உன்னிருப்பிடம்
மனமுருகிப்பாடுவோம்
தினம் தினம்...
மகிழ்வோடு வாழ
வேண்டும் உன்னருள்
என்றும் கிட்டவேண்டும்
காணாபத்தியம்
வித்தியம் தரும் நித்தியம்
சக்தியும் புத்தியும்  இணையும்
விநாயகம்
துணையிருப்பின்
ஏது பயம். பிரணவம்
ஓங்காரப் பொருள்தரும்
சகலதும் சத்தியமாய் கைகூடும்
தேவாரம் பாடினால்
வினையாவும் காணாமல்
ஓடிவிடும் ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாய்ந்து வரும்

பாய்ந்து வரும்
காளை அடக்கி
மாலை சூடும்
காளைக்கு மாலையிடும்
வீர வழி கண்ட குடி...
பண்பாட்டை
இழந்து பின்பற்ற
முடியாமல் பின்தங்கி
வாழுது தலைவிதி...
வெட்டப்படும் மாட்டுக்கு
கண்ணீர் இல்லை
முட்டவரும் மாட்டை
தொட்டால் பிழை ...
வெக்கக்கெட்ட
சன நாயகம்
இயற்றிவிட்ட சட்டம்
இன அழிப்பின்
உச்சக்கட்டம் ...
சிரியாவில் சிந்தும் இரத்தம்
சாதி வெறியில் சரியும் சடலம்
மதவெறிக்கு காணிக்கையான
மரணம்
இவைகளுக்கு யார்
காட்டுவர் இரக்கம்
மாட்டை விட கேவலமான
மனித சடலம்
மதிக்கபடும் மகத்தான
உலகில்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டு வாழ்க்கை

பனி மழையக கொட்டும்
பயணங்கள் தொடரும்
பாசத்தின் காரணம்
பணத்துக்காக
பாதை அமைக்கும்
வாங்கிய கடன்
வந்த கடன்
வாடகை கடன்
மாதம் மாதம்
வந்து போகும்
வாங்கிய சம்பளம்
வற்றிப் போகும்...
தொலைபேசி அழைப்பு
பாசத்தின் வழி
முகப்புத்தக படத்திலே
பணக்கார மொழி
ஏழ்மையைப் போக்க
அகதியானவன் கதி
அம்மாவின் கையால்
ஆசையாய் குடிக்கும்
தேனீர் அந்த கோப்பையும்
நானும் அநாதையாகக்
கண்ணீர் வழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊரின் மரத்தடி

ஊரின் மரத்தடி
ஊஞ்சல் ஆடுவோம்
விழுதுகள் பற்றி
உதிரும் இலைகள்
குற்றி ஆடு
வளர்த்தோம்
ஆழிலை ஊட்டி...
அரிசிக் குருவி
அப்பப்போ வந்து
போகும் மந்தி
தெருக் கூத்து
பார்த்தோம் மரத்தின் கீழ் குந்தி
மழைக்கு கூடுவோம்
ஆலமரத்தை சுற்றி
வருடாவும் நாடாவும்
தொட்டுக் கூட
அசராமல் நின்றமரம்
அவசரமாய் வந்த
அரசமரம் கண்டும்
அஞ்சாமல் நின்ற மரம்
அபிவிருத்தி அழித்தது
தெருவில் நின்று
ஆட்சிசெய்த மரத்தை
அறியாமல் அழிக்கிறோம்
அரிய வளத்தை...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்றல் வந்து

தென்றல் வந்து
தீண்டும் போது
உந்தன் ஞாபகம்
தேடி வந்து சேதி
சொல்லி போவாய்
சீக்கிரம்...
தேனா பேசி செய்தாய்
மந்திரம்
தேட விட்டு ஓடி விட்டாய்
என்ன காரணம்...
மலரென்று சொல்லி
என்னை மடியில்
போட்டாய்
வாடவிட்டு நீ மட்டும்
மறைந்து போனாய்
மங்கை என்னை
காண நீ எப்போ
வருவாய்...
நெஞ்சத்தில் நீயிருந்து
நித்தம் என்
நினைப்பில் கனவாய்
ஆனாய்
நிஜத்தில் நீ எப்போ
எனக்கு கணவன் ஆவாய்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தனமே என் சத்தியமே
சாவதற்க்கிடையில்
என்னை சந்தியுமே
எப்பொழுதும் உன் கற்பனையே...
இப்போ வந்து
என் கற்பணையேன்...

## காமத்தின் பரிவு காதல்

காதலின் கழிப்பு காமம்
காமத்தின் வடிகால்
திருமணம்
வரன் முறை மீறின்
விபச்சாரம்
ஒருதாரம் இருப்பதே சட்டம்
பல பேர் இங்கே பல
தாரம்
நாசமாப்போகுது
கலாச்சாரம்
பணத்தால் அடைத்திட முடியா
பாவம்
பாதை மாறிப்போகும்
எம்மினம்
விடை சொல்ல
வேண்டியது நீயாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதியில் கண்ட நிலவு

வீதியில் கண்ட நிலவு
நித்தம் அது என் கனவு
பேணிக்காக்கும் மனசு
பெண்னே என்னுடன் பழகு
சந்தன நிறத்தழகு
சந்திர ஒளியழகு
சத்தியமாய் நீ என் உலகு...
பொருந்தாத
காதலென்று புரத்தே
பல கதையுண்டு
பூவே நீயின்றி என்
வாழ்வில்
ஒளியென்று
போகட்டும் பேதங்கள்
மண்ணோடு
நீ வாழவேண்டும் என்னோடு...
கசக்கும் மருந்து நோயாற்றும்
காயங்கள்
கண்டுதான் காதல் நிறைவேறும்
நீ என் கரம் சேரும்
காலம் எம் காதல்
கைகூடும்
நாம் கண்மூடும்
காலம் எம் காதல்
முடிவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவள்தான் என் காதலி

தாய் காட்டிய பாதை
அவள் ஊட்டிய கீதை
தரணி போற்றி மேதை
தடம் பதித்த சாலை
தமிழ் என்ற மாலை
அதுவே நான் கொண்ட வாழ்க்கை.....
அதன் மேல் என் காதல்
அவளே என் காதல்
நாவில் என்றும்
தவழும் நானாக
என்னை நிறுத்தும் .....
தமிழ் நடையிலே நெஞ்சை
நிமிர்த்தும்.....
மனிதன் மொழிந்த போது
மொழியானவள்
பல கிளைகளுக்கு
வேரானவள்
பாரெங்கும் பாயும்
நதியானவள்....
குமரிக் கண்டத்தின்
குமரி
குறையில்லா இளமி
கவிஞன் கற்பனைக்கு
எட்டாத காதலி
அவளே என் காதலி....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உழைப்பில் களைப்பில்லை

விளைச்சல் சளைத்தாலும்
தழைக்கும் பயிரின்
சிரிப்பும்
எம் மழலை பசி மறப்பும்
உழைக்கும் குலச் சிறப்பும்
இதுவே எம் விருப்பம்...
பசியிருக்கும் வரை
நிலம் விளையும்
உலகம் என்றும்
எம்மை நினைக்கும்
உழவின்றி உணவில்லை
உழைப்பின்றி உணவில்லை
இடையில் ஏன் பணம்
விசமின்றி விளையணும்
விதைத்தவன் பலன் அடையனும்
விவசாயம் உயர்தொழில் ஆகனும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தங்கள் ஆசிகளுடன் என்
எழுத்துப் பயணம் தொடரும்...

-நன்றி-

-வட்டக்கச்சி வினோத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலாசிரியர் பற்றி....



ஈழத் திருநாட்டின் அழகெல்லாம் தவழ்ந்து விளையாடும் வடபகுதியின் நீரேந்துப் பிரதேசமான இரணைமடுக் குளக்கரையில் அமைந்திருக்கும் வட்டக்கச்சியின் புத்திரனே வினோத். சமூகப் பிடியின் பரப்புக்களில் காணுகின்றவற்றை. தனது அடிமனசின் ஆழத்திலிருந்து அடிக்கடி உந்திவிடப்படும் வரிகளால்த் தொகுத்து முதலாவதாக கன்னிக் கவிதை நூலொன்றை வெளியிட்டுள்ளார். காலம் என்பது நதியைப் போல நகர்ந்துகொண்டே இருக்கும். எப்பொழுதும் அது திரும்பி வருவதில்லை. அதில் பல நெளிவு சுழிவுகளும் தடைகளும் இருந்தாலும் இடர்களைத் தாண்டிக் கடலை அடையும் என்பது நியதி. ஆகையினால் தனது வாழ்வின் ஓரத்து எண்ணவோட்டத்தை "காலநதி" யாக எமது கைகளில்த் தந்திருக் கிறார் எனலாம். இயல்பாகவே கவிதை எழுதும் ஆற்றலையிவர் கொண்டிருந்தாலும். முகநூல்க் கவிஞராகவே இலக்கிய இளவல்களோடு கைகோர்த்துக் கொண்டார். காலப்போக்கில் காலத்தராசு இவரது கவிதைகளின் கனதியை அளவிட்டுக் கொண்டது. அரங்கக் கவிதைகளில் சந்தவோசை துள்ளி விளை யாடுவதை பல தடவைகள். எனது தலைமையிலான கவியரங்கங்களில் கண்டிருக்கிறேன். உணர்ச்சி வசப்படாத நிதானக்கவிஞராக என்னால் இனங் காணப்பட்டவர். நூலாக்கச் செயற்பாட்டில் ஈடுபட்டிருப்பதும் மன நிறைவே. ஆதலால், சகலவிதமான எதிர்பார்ப்புக்களையும் கடந்து ஈழத்துப் புதுக்கவிதைத் தடத்தில் தனக்கென வடம் பற்றிக்கொள்ள வேண்டும் என்பது எம் அனைவரது விருப்பமுமாகும்.



– வே.முல்லைத்தீபன்

9789554346604
Rs.220/-
VIJAY PRINTING PRESS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org